**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**<u>02.03.2026</u>**
OS. No. 87/2020
பக்கம் – 3
PW1 – சபாராபீ

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

எனது பக்க கூடுதல் முதல் விசாரணையை கூடுதல் பிரமாண பத்திரமாக தாக்கல் செய்கிறேன். 21.02.2006 தேதியிட்ட மாரியம்மாளின் இறப்பு சான்றிதழின் புகைப்பட நகல் வா.சா.ஆ.5 ஆகும். மாரியம்மாளின் வாரிசு சான்றிதழின் புகைப்பட நகல் வா.சா.ஆ.6 ஆகும். அப்துல்கரிமின் இறப்பு சான்றிதழின் புகைப்பட நகல் வா.சா.ஆ.7 ஆகும். என்னுடைய கணவர் 6ம் பிரதிவாதிக்கு கொடுத்த ஆட்சேபணை கடிதத்தின் புகைப்பட நகல் வா.சா.ஆ.8 ஆகும். 13.06.02020 தேதியிட்ட நான் பிரதிவாதிகளுக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.9 ஆகும். நான் 6ம் பிரதிவாதிகளுக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் அசல் அஞ்சலக ரசீதுடன் கூடியது வா.சா.ஆ.10 ஆகும்.

(மேலும் சில ஆவணங்களை குறியீடு செய்ய வாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்